புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed
ISSN : 2456-821X
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/02 - March 2023

# அம்பையின் பிரசுரிக்கப்படாத கைப்பிரதி – ஒரு பெண்மைய வாசிப்பு

ஆய்வாளர்

அல்லி . ஆ, பதிவு எண் : 21113164022023

முனைவர் பட்ட ஆய்வாளர் , தமிழ்த்துறை

ஸ்காட் கிறித்தவக் கல்லூரி (தன்னாட்சி)

நாகர்கோவில் – 629003, கன்னியாகுமரி மாவட்டம்

நெறியாளர்

முனைவர் : ரா.ச.ராஜ ஸ்ரீ

உதவிப் பேராசிரியர்

தமிழ்த்துறை

ஸ்காட் கிறித்தவக் கல்லூரி (தன்னாட்சி)

நாகர்கோவில் – 629003

கன்னியாகுமரி மாவட்டம்

**ஆய்வுச்சுருக்கம்**

பெண்கள் உருவாக்கிய , பெண்கள் எழுதிய படைப்புகளின் ஊடாக பெண்களின் தனிப்பட்ட மற்றும் சமூக நிலையை பெண்களே திறனாய்வாளர்களாக அணுகி ஆய்வு மேற்கொள்வதே பெண்மையத் திறனாய்வு எனப்படுகிறது. ஒரு பெண் ஆணினுடைய படைப்பினையோ அல்லது ஒரு ஆண் பெண்ணின் படைப்புகளையோ திறனாய்வு முறையில்

அணுகி ஆய்வு மேற்கொள்ளும்போது கிடைக்கும் உண்மைகளை விடவும் பெண்மைய நோக்கில் மேற்கொள்ளப்படும் ஆய்வானது அப்பெண் படைப்பாளரின் படைப்பரசியலையும் , அச்சமூகத்தின் பெண்ணிய நிலைப்பாட்டையும் எதார்த்தமான நிலையில் நுணுக்கமாக வெளிக்கொணர உதவும். பெண்ணிய புனைவு அரசியலை கோட்பாட்டின் ஊடாக ஆராய்ந்துணர்வதன் வழியாக தந்தைவழிச் சமூக நிறுவனங்களின் சூழ்ச்சியை தோலுரித்துக்காட்டிட இயலும். இன்றைய சூழலில் பெண்ணிய நோக்கில் மேற்கொள்ளப்பட்டுவரும் பெரும்பாலான ஆய்வுகளும் பெண்களின் அவலநிலை, பெண்களின் பிரச்சனைகள், சிக்கல்கள், அவற்றுக்கானத் தீர்வுகள் என்னும் கருத்துருவாக்கங்களின் வழி புனைவில் வரும் பெண்பாத்திரங்களின் வாழ்வியல் செய்திகளைத் தொகுத்து அளிப்பதுடன் நின்றுவிடுகின்றன. பெண்ணிய இலக்கியக் கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்த ஆய்வுகளின் முடிவுகள் பெண்களுக்கெதிரான சமூகக்காரணிகளை அடையாளம் காட்டிடும் என்பதனால் அம்முடிவுகள் பெண்ணியக் கோட்பாட்டின் வளர்ச்சிக்கும் பெண்களின் மேம்பாட்டிற்கும் மிகவும் இன்றியமையாததாக அமையும். அந்தவகையில் அம்பையின் ‘ பிரசுரிக்கப்படாத கைப்பிரதி’ என்னும் சிறுகதையை பெண்ணியக் கோட்பாடுகளின் அடிப்படையில் பெண்மையத் திறனாய்வு நோக்கில் அணுகி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**முன்னுரை**

பெண்ணியத் திறனாய்வு என்பது ஆண்படைப்பாளியின் படைப்புகளில் பெண்களின் தனிப்பட்ட மற்றும் சமூகநிலைகளை ஆண் அல்லது பெண் விமர்சகர்கள் இனம்கண்டு திறனாய்வதாகும். பெண்ணிய விமர்சனத்தை ஆண்கள் திறனாய்வாளர்களாக இருந்து செயலாற்றிடும்போது பெண்கள் ஒடுக்கப்பட்ட நிலைகளை மிகவும் இயல்பானது என்று கடந்து செல்லும் போக்கினைக் காணமுடியும். இதிலிருந்து மீளுவதற்கான ஒரு மாற்று செயலூக்கமாக பெண்மையத் திறனாய்வினை எலைன் ஷோவால்டர் முன்வைக்கின்றார்.

பெண்மையத் திறனாய்வு என்பது பெண்கள் உருவாக்கிய அல்லது எழுதிய படைப்புகளில் பெண்களின் நிலையைப் பெண்களே திறனாய்வாளர்களாக அணுகி ஆய்வதாகும். பெண்மையத் திறனாய்வு நோக்கில் பெண்எழுத்தாளர்களின் படைப்பினை அணுகி ஆராயும் சூழலில் எதார்த்தமான நிலையில் பெண்கள் என்ன உணர்ந்தார்கள், என்ன அனுபவம் பெற்றார்கள் என்பதை வெளிக்கொணர இயலும். பெண்ணிய புனைவு அரசியலை கோட்பாட்டினூடாக ஆராய்ந்துணர்வதன் வழியாக தந்தைவழிச் சமூக நிறுவனங்களின் சூழ்ச்சியை தோலுரித்துக்காட்டிட இயலும். இன்று நடைப்பெற்றுவரும் பெரும்பாலான பெண்ணிய நோக்கில் அமைந்த ஆய்வுகளும், ஆய்வு முடிவுகளும் பெண்களின் மேம்பாட்டிற்கும், பெண்ணியக் கோட்பாட்டிற்கும் எந்த பயனும் இல்லை. அந்தவகையில்

*புனைவில் வரும் பெண்பாத்திரங்களின் வாழ்வியல் செய்திகளைத் தொகுத்து வழங்குவதோடு நின்றுவிடுகிறது. பெண்ணியக் கோட்பாட்டின் அடிப்படையில் ஆய்வு செய்திட கோட்பாட்டின் கீழ் ஒரு அணுகுமுறையை உருவாக்கி அதன்வழி பெறப்படும் முடிவுகள் ஒரு பெண்எழுத்தாளரின் படைப்பின் புனைவு அரசியலையும், அப்படைப்பினை உருவாக்கிய அவ்வெழுத்தாளரின் படைப்பு அரசியலையும், அவர் சார்ந்த சமூகத்தின் பெண்ணிய நிலைப்பாட்டையும் நுணுக்கமாக வெளிக்கொணர உதவிடும். அந்தவகையில் அம்பையின் 'பிரசுரிக்கப்படாக கைப்பிரதி' என்னும் சிறுகதையை பெண்ணியக் கோட்பாடுகளின் கீழ் அணுகுமுறையை உருவாக்கி அதனடிப்படையில் பெண்மையத் திறனாய்வு நோக்கில் அணுகி ஆராய்வதே இக்கட்டுரை நோக்கமாகக் கொண்டுள்ளது.*

**பெண்மையத் திறனாய்வின் தேவை**

*ஆண்பால் பெண்ணிய திறனாய்விலிருந்து மாறுபட்டுப் பெண்களே பெண்களின் இலக்கியங்களை அணுகி ஆய்ந்து விமர்சித்தல் இன்றியமையாததாகிறது. எலைன் ஷோவால்டர்* **" பெண்ணிய விமர்சனத்தில் பெண்கள் என்ன உணர்ந்தார்கள், என்ன அனுபவம் பெற்றார்கள் என்பவற்றை நம்மால் அறியமுடிவதில்லை மாறாகப் பெண்கள் எப்படி இருக்கவேண்டும் என்று ஆண்கள் நினைத்தார்களோ அவற்றை மட்டுமே நாம் அறிகிறோம் "**[1] *என்று கூறியது மிகப்பொருத்தமுடையதாகிறது. Contemporary Criticism An Anthology என்னும் கட்டுரையில் பெண்மையத் திறனாய்வின் தேவையை விளக்கி செல்லும் எலைன் ஷோவால்டர் அவற்றில் பெண்எழுத்தாளர்களின் படைப்புகளைக் கீழ்கண்டவாறு காலவரிசைப்படி மூன்றாகப் பிரித்து வழங்கியுள்ளார்.*

1. *பெண்மைக்கட்டம் - இது தந்தைவழி ஆதிக்க மரபின் கருத்தாக்கங்களை உள்வாங்கி அதேபோல்*

*செய்யும் காலகட்டம்.*

2. *பெண்ணியக்கட்டம் -பெண்ணுக்கெதிரான விழுமியங்களை எதிர்த்து வாதாடிய, உரிமைக்கோரிய*

*கலகக் காலகட்டம்.*

3. *பெண்பால் கட்டம் – இது பெண் தனக்கான வெளியை கண்டடையும் காலகட்டம். ஆணுடன்*

*சமத்துவப் போராட்டம் மேற்கொண்டோ, பெண்மையத் தாழ்வாகக் கருதவோ செய்தியால் பெண்ணின் தனித்தன்மைகளை உணர்ந்து அவற்றை கொண்டாடும் காலகட்டம்.*

பெண்மையத் திறனாய்விற்காக எடுத்துக்கொள்ளும் ஒரு படைப்பின் பின்னணியை அல்லது உள்ளடக்கத்தை ஒட்டி அது மேலே கூறப்பட்ட எந்த காலகட்டத்தை அடியொற்றிய பெண்ணிய எழுத்து என்பதை தீர்மானிக்க முடிகிறது. இது தவிர பெண்மையுத் திறனாய்வின் வழி பெண்எழுத்தாளர்கள் தாங்கள் படைக்கும் பாத்திரங்களில் எவ்வகையான மாறுதல்களை மேற்கொண்டுள்ளனர், எந்தெந்த புனைவு உத்திகளையும், தனித்தன்மைகளையும் கையாண்டுள்ளனர் என்றும் பெண்ணியக் கோட்பாட்டின் வழி பெண்ணிய அணுகுமுறையின் கீழ் எந்தெந்த கோணங்களின் வழியாக பெண் படைப்பாளரின் பெண்ணிய நிலைப்பாட்டை கண்டறிந்துள்ளனர் என்பதையும் பெண்மையத் திறனாய்வின் ஊடாக ஆய்ந்தறிய முடியும்.

**கதைக்கரு**

இக்கதையில் தாய்-மகள் உறவு நிலையில் தாயின் கடந்தகால வாழ்வினை மகளின் நினைவின் மூலம் ‘அம்பை’ பதிவு செய்துள்ளார். திருமகள் தன் மகள் செந்தாமரையை இலக்கியம்,பதிப்பகம் முதலியவற்றில் தன் தோழியாக வளர்கிறாள். செந்தாமரைக்கு தன் தாயின் கைப்பிரதி கிடைக்கிறது அதன்வழி தாயின் கடந்தகால வாழ்வினை அறிகிறாள். திருமண உறவால் பல இன்னல்களை அடையும் திருமகள் அதிலிருந்து மனவலிமையுடன் மீண்டு தன் மகளை வளர்ப்பதாக இக்கதை அமைகிறது.

**தலைகீழாக்குதல்**

தலைகீழாக்குதல் என்பது மரபான பிம்பங்களைப் பெண் புனைவுகளில் தலைகீழாக்கி அதற்கு நேர்முரணான பாத்திரமாக மாற்றுவது அல்லது அதற்கான கேள்விகளை முன்வைப்பதாகும். ‘பிரசுரிக்கப்படாத கைப்பிரதி’ எனும் சிறுகதையில் சமூகத்தின் அனைத்து நிலைகளிலும் பெறுவது ஆணின் உரிமையாகவும், கொடுப்பது பெண்ணின் கடமையாகவும் கட்டமைக்கப்பட்டிருக்கும் தந்தைவழி ஆதிக்க சமூகத்தினை அம்பை அடையாளப்படுத்துகிறார். பாரதிதாசனின் ‘துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ இன்பம் சேர்க்கமாட்டாயா?’ என்னும் பாடலில் கிறங்கித்தவிக்கும் தன் மகள் செந்தாமரையிடம், **“ஒரு ஆண் யாழ்வாசித்து அவள் துன்பத்தைப் போக்கி இன்பம் சேர்ப்பதாக ஏதாவது கற்பனை அவளுக்கு தோன்றுகிறதா என்று கேட்பாள். இவள் இல்லை என்றாள். ஏனென்று அவள் யோசிக்க வேண்டும் என்றாள் அம்மா.”**[2] என்று கேட்டிடும் கேள்வி ஆண்டாள் பெருமாளுக்காக தன்னை இழப்பது தொடங்கி இன்றுவரையிலும் தமிழ் இலக்கியங்களில் பெண்ணை போகப்பொருளாக்கி உலவவிடும் மரபாக்கத்தை அம்பை தலைகீழாக்கியுள்ளமையை புலப்படுத்துகிறது.

**புதிய வகைமாதிரிகளை உருவாக்குதல்**

*மரபின் பெயரால் பழகித்தோய்ந்து போன பெண்ணுக்கு எதிரான கருத்தாக்கங்களையும்,ஒரே வகையான மாதிரிகளையும் அப்புறப்படுத்திப் புதிய கோணத்தில் புதிய வகைமாதிரிகளை உருவாக்குதல் என்பது பெண்ணிய எழுத்துக்களின் இன்றியமையாத நோக்கமாகும். அந்நிலையில் வழக்கமான தந்தைஅதிகார சமூகத்தின் தாக்கம் சிறிதும் அற்ற, பெண்களின் இருப்பு குறித்த புரிதல்களைக் கொண்டவராக திருமகளின் தந்தை ராமசாமியை படைத்துக்காட்டிப் புதுமை செய்திருக்கிறார் அம்பை. பதிப்பக உரிமையாளரான அவரின் பாத்திரத்தை அறிமுகப்படுத்திடும், **“தாலிமகிமை,வெள்ளிக்கிழமை விரதம் என்று சடங்குகளையும் சின்னங்களையும் வலியுறுத்தும் புத்தகங்களை வெளியிடமாட்டார். பூப்பெய்துவிழாச் சடங்கு அழைப்பிதழ், சடங்குகளுடன் நடக்கும் திருமண அழைப்பிதழ்கள் இவற்றை அடிக்கமாட்டார்.”**[3] என்னும் வரிகளின் வழி பெண்ணை இரண்டாம் நிலைக்கு வைத்திருக்கும் வகிபாவங்களை மறுக்கும் ஆண்பாத்திரமாக அவரை படைத்திருக்கிறார் அம்பை.*

*ஆண் எழுத்தாளர்கள் தங்களது புனைவிலக்கியங்களில் உருவாக்கியுள்ள பெண்பாத்திரங்கள் பலவும் ஆணை முன்னிலைப்படுத்திடும் ஒரே வகைமாதிரிகளாகவே புனையப்பெற்றுள்ளன. இதற்கு எதிர்வினையாக பெண் எழுத்தாளர்களின் மரபான பெண்ணின் பிம்பங்கள் குறித்த எதிர்சிந்நனையாக அமைந்துள்ளன. உதாரணமாக, **”பாரதி பக்கத்து வீட்டுக்குப்போய் அரிசி கடன் கேட்டதும் போல் நினைத்துப்பார்ப்பாள். அவர் கொண்டு வந்த அரிசியைச் செல்லம்மாள் உற்சாகமாகக் குருவிக்குப் போடுவதும் போல் கற்பனை செய்வாள்”**[4] என்னும் வரிகளில் மரபான பெண் மாதிரிகளை அம்பை புத்தாக்கம் செய்துள்ளார்.*

**புதிய மதிப்பீடுகளை உருவாக்குதல்**

*பெண் எழுத்தாளர்கள் தாங்கள் எதிர்பார்க்கும், விரும்பும் ஒரு சமூகத்தில் உறவுகள் சார்ந்தும் உணர்வுகள் சார்ந்தும் என்னென்ன மதிப்பீடுகள் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள் என்பதைத் தமது எழுத்துக்களில் படைத்துக்காட்டுகின்றனர். அந்த வகையில் அம்பை தனது சிறுகதையில் திருமகள் தனக்கான ஆணின் எதிர்பார்ப்பாக, **“ அவனுக்கு உருகத் தெரியவேண்டும்.‘நெக்கு நெக்குள் உருகி உருகி’ இருக்க அவனுக்குத் தெரியவேண்டும்”**[5] என்று பெண்ணுக்கானதாக காலங்காலமாக சமூகம் வரையறுத்துள்ள மதிப்பீடுகளை மாற்றி அதை ஆண்சார்ந்த கருத்தாக்கமாக மாற்றியிருப்பதை ஒரு மதிப்பீடு என்று கொள்ளலாம்.*

***புதிய தீர்வுகள் கூறுதல்***

*பெண்ணுக்குச் சாதகமாக பேசுவது போன்ற ஆண் படைப்புகள் இறுதியில் மரபார்ந்த முடிவுகளையும் தீர்வுகளையுமே வழங்கிவருகின்றன. இதிலிருந்து மாறுபட்டுப் பெண்களின் வளர்ச்சிக்கு உதவிடும் புதிய தீர்வுகளை உருவாக்கிடும் புதிய அணுகுமுறையை பெண்எழுத்துக்களில் காணமுடியும். இக்கதையில் சீர்திருத்தவாதியாக அறியப்படும் ராமசாமியின் நண்பர் ஒருவர் விதவைப்பெண்களுக்கு மறுவாழ்வு தர 'விதவா விவாகம்'தான் ஒரே வழி என்று ஆண்களை தியாகம் செய்ய அழைத்து தன் புத்தகத்தை படைத்துள்ளதாக கூறிடவும், ராமசாமி அதற்கு மறுதலையாக,* ***"ஆமா, ஒரு விதவைப்பொண்ணு ஒருத்தனைக் கட்டிக்கிட்டாதான் அவ வாழ்வு அமையும்ங்கறதுல என்னங்க புரட்சி? அவ படிக்கிறதுக்கும் வேலை பண்ணுறதுக்கும் உதவி பண்ணனும்"***[6] *என்று ஆண்எழுத்தின் தந்தைவழி அதிகாரமையத்தை அம்பலப்படுத்தி பெண்விடுதலைக்கு சாதகமான எதார்த்தங்களை அடியொற்றிய தீர்வுகளை தன் எழுத்தின் வழி படைத்துள்ளார் அம்பை.*

***பெண் வெறுப்பு***

*ஆண் எழுத்தாளர்களின் படைப்புகள் பலவும் பெண்ணை இரண்டாம் இடத்தில் இருப்பவராக, ஆற்றலற்றவளாகக் கட்டமைத்திருப்பதின் பின்னணியை அரிஸ்டாட்டிலின் பெண் குறித்த நிலைப்பாட்டிலிருந்து உணரலாம்.* ***"பெண் பாத்திரங்களைப் படைக்கும்போது கூர்ந்த அறிவாளிகளாகப் பெண்களை படைக்கக்கூடாது. பெண்களை மிகவும் புத்திசாலிகளாக படைத்தால் பாத்திரப்பொருத்தம் அமையாது."***[7] *என்னும் அவரின் கருத்து தந்தைவழிச் சமூகத்தின் பெண்வெறுப்பை அம்பலப்படுத்துகிறது. பெண்ணுக்கு ஆதரவளிப்பதாக சமூகத்தை அப்பெண்ணின் மீது பரிவுகொள்ளும்படி ஆண் எழுத்தாளர்கள் எழுதுவது பெண் வெறுப்பின் வேறொரு வடிவமே என்கிறார் காத்ரின்.எம்.ரோஜர்ஸ். அவரின் கோட்பாட்டினை உறுதிசெய்யும் வகையில் அம்பை இக்கதையில் பெண்களின் பாதுகாவலர் என்று பலராலும் புகழப்படும் ஒருவரின் தந்தைவழிச் சமூகத்தின் தந்திரத்தை பீடத்திலிருந்து இறக்கிவிடுகிறார்.* ***"இது ஏதோ ஆம்பள வந்து அவளுக்கு வாழ்வு தரணும்கறது அவள ஆம்பள கீழயே வைக்கணும்னுட்டு சொல்றாப்பல இருக்கே. அவ நிழல்லதான் இவ ஒண்டனும்கறாப்பல. அதை ஏன் வாழ்வு தரதுன்னுட்டுச் சொல்றீங்களே?"***[8] *என்று ராமசாமியின் வழி ஆண் எழுத்தின் பெண்வெறுப்பினை அம்பலப்படுத்தி உள்ளார் அம்பை.*

***இரண்டாம் நிலை செயல்பாடுகள்***

*பிற அதிகாரங்களைப் போல் அல்லாமல் ஆணின் பெண்மீதான அதிகாரம் பெண்களாலேயே விரும்பி ஏற்றுக்கொள்ளப்படுவதாகவும், அதற்கு அவர்கள் எந்தவித*

*மறுப்பையும் பதிவு செய்வதில்லை என்பதுமே பெண்ணின் சமூகப் படிநிலையை இரண்டாம் நிலைக்கு தள்ளியுள்ளது என்னும் ஜான் ஸ்டுவார்ட் மில்லின் கோட்பாட்டின் படி பெண்களுடைய பங்களிப்புகளை இழிவானதாகவும், மதிப்பற்றதாகவும் கட்டமைத்துள்ள சமூக மதிப்புகளுக்கு அடிப்பணிந்தே பெரும்பாலான தந்தைவழி சமூகத்தின் பிம்பங்களை உள்வாங்கியப் பெண் எழுத்தாளர்களின் எழுத்துக்களும் அமைந்துள்ளன. கல்லூரி மற்றும் பதிப்பக பணிகளை முடித்துவிட்டு சற்று ஓய்வெடுக்கவரும் திருமகளிடம் "* ***ஏங்க, தமிழ்ப் பண்பாடே விருந்தோம்பல் தாங்க. இவ்வளவு பெரிய கவிஞரை கட்டியிருக்கீங்க. அவரையும் அவர் நண்பர்களையும் உபசரிக்க வாணாமா?"***[9] என்னும் ஆண்களின் சொற்கள் ஒரு *பெண்ணின் செயல்பாடுகள் அல்லது அவள் செய்யவேண்டியவை என்று கற்பிக்கப்பட்டுள்ள செயல்பாடுகள் அனைத்தும் பெண்ணை இரண்டாம் நிலையிலேயே தக்கவைத்திட முனையும் ஆண்மைய சமூகத்தின் குரலாகும். இத்தகைய இரண்டாம் நிலையிலேயே தக்கவைத்திடும் முயற்சிகளுக்கு எதிர்குரலாக அம்பை தனது பெண்பாத்திரத்தை,* ***"எனக்கு விருந்தோம்பல பத்திச்சொல்ல நீங்க யாரு? எனக்கு நாலு வேலை இருக்கும். அசதியா இருக்கும். உங்க தமிழ்ப் பண்பாட்டுல ஒரு பெண்ணுக்கு படுத்துத் தூங்க வேளை, பொழுது உண்டில்லையா?"*** *10 என்று இரண்டாம் நிலைக்கு தக்கவைத்திருக்கும் மரபான உதாசினங்களுக்கு உடன்படாத பெண்ணாக திருமகளை படைத்துள்ளார்.*

**முடிவுரை**

*எதார்த்தத்தை எழுதுவதாகக் கூறி பெண்களை இன்றைய சமூக அவலங்களில் சிக்கித்தவிக்கும் பாத்திரங்களின் வாழ்வியல் செய்திகளைத் தொகுத்து அளிப்பதோடு நின்றுவிடும் பெண்படைப்புகளால் பெண்ணிய மேம்பாட்டிற்கு எந்தவித பயனும் இல்லை என்பதை உணர்ந்து தந்தைவழி சமூகத்தின் தந்திர உத்திகளை அடையாளப்படுத்தும் வகையில் பெண்பாத்திரங்களையும், ஆண்மையச் சமூகத்தின் சாயல் சிறிதும் அற்றவகையில் ஆண்பாத்திரத்தையும் படைத்திருக்கும் அம்பையின் முயற்சி எலைன் ஷோவால்டரின் பகுப்பின்படி பெண்பால்கட்டத்தின் கருத்தாக்கங்களை அடியொற்றி பெண்ணிய எழுத்துக்களுக்கு முன்மாதிரியாக அமைகிறது. பெண்எழுத்து என்றாலே நாங்கள் இப்படி இருக்கிறோம் என்னும் தன்னிறக்க சுயபுலம்பல்கள் என்ற பொதுபுத்தியை சிதைத்திடும் வகையில் காலங்காலமாக தமிழ் சமூகத்தில் கட்டமைக்கப்பட்டுள்ள மரபான பெண்பிம்பங்களை தலைகீழாக்குதல், ஒரே வகையான மாதிரிகளை அப்புறப்படுத்தி புதிய வகைமாதிரிகளையும் மதிப்பீடுகளையும் உருவாக்குதல், ஆண் எழுத்தின் தந்திரங்களை பெண்ணெழுத்தின் ஊடாக தகர்த்தல், இரண்டாம் நிலை செயல்பாடுகளாக கருதப்படும் பெண்களுக்கான சமூக மதிப்பீடுகளை பெண்களுக்கு சாதகமாக கட்டமைத்தல் போன்ற புதிய பார்வைக்கோணங்களையும் பெண்ணிய எழுத்தாளர்களின் புனைவுகள் கொண்டிருக்க*

வேண்டியிருக்கும் நிலையில் அம்பையின் இச்சிறுகதை பெண்ணிய எழுத்துக்களுக்கு அத்தளத்தை நோக்கிய முன்மாதிரியாக அமைகிறது.

**சான்றெண் விளக்கம்**

1. ராஜ் கௌதமன், பெண்ணியம் வரலாறும் கோட்பாடுகளும், ப.97
2. அம்பை, அம்பை கதைகள் ( 1972-2014 ) ப.403
3. மேலது.,பக்.407- 408
4. மேலது.,ப.405
5. மேலது.,ப.408
6. மேலது.,ப.403
7. மணவாளன்,.அ.அ, அரிஸ்டாட்டிலின் கவிதை இயல், ப.75
8. அம்பை, அம்பை கதைகள் (1972-2014) ப.408
9. மேலது.,ப.415
10. மேலது.,ப.415